# COMPOUND INTEREST ASSIGNMENT

1. The compound interest on Rs.800/- for two years at 5% is
ரூ. 800/- க்கு 2 ஆண்டுகளுக்கு 5 % கூட்டு வட்டி
a. ₹82 b. ₹62 c. ₹80 d. ₹68

2. The compound interest on Rs.10,000 for 3 years at 10% per annum is அசல் தொகை ரூ.10,000க்கு 3 வருடங்களில் ரூ.10 வட்டி விகிதத்தில் கிடைக்கும் கூட்டு வட்டி
a. 3,312 b. 3,310 c. 3,300 d. 330

3. Find compound interest of ₹10000 for 3 years if rate of interest is 5%, 10% and 20% for first, second and third years respectively.
மூன்று ஆண்டுகளுக்கான வட்டி வீதம் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் ஆண்டுக்கு முறையே 5 விழுக்காடு, 10 விழுக்காடு மற்றும் 20 விழுக்காடு எனில், ரூபாய் 10,000க்கு 3 ஆண்டுகளுக்கு கூட்டு வட்டியைக் கண்டுபிடிக்கவும்.
a. ₹3310 b. ₹3500 c. ₹3860 d. ₹3980

4. The compound interest on Rs.5,000 at 16% per annum for 1 year compound half-yearly is
16% கூட்டு வட்டியில் ரூ.5,000க்கான ஒரு வருட வட்டி (கூட்டு வட்டி 6 மாதத்துக்கு ஒருமுறை சேர்க்கப்படுகையில்)
a. Rs.832 b. Rs.382 c. Rs.283 d. Rs.823

5. Find out the compound interest on Rs.1,25,000 for 9 months at 8% per annum compounded quarterly.
ரூ.1,25,000க்கு ஆண்டுக்கு 8 சதவீதம் என்ற வட்டி வீதத்தில் 9 மாத காலத்திற்கு, காலாண்டுக்கு ஒரு முறை கணக்கிடுவதன் அடிப்படையில் எவ்வளவு கூட்டு வட்டி கிடைக்கும்?
a. Rs.5561 b. Rs.2651 c. Rs.7651 d. Rs.5651

6. The time in which Rs.6250 will amount to Rs.6760 at 4% compound interest
ரூ.6,250 ஐ 4 சதவீத கூட்டுவட்டியில் எத்தனை ஆண்டுகளில் அதன் மொத்தத்தொகை ரூ.6760 ஆக மாறுகிறது?
a. 2  b. 3  c. 4  d. 2 ½

7. The compound interest on Rs. 30,000 at 7% per annum is Rs. 4347. The period (in years) is:
ரூ.30,000 ஐ 7 சதவீத கூட்டுவட்டியில் எத்தனை ஆண்டுகளில் வட்டித்தொகை ரூ.4347 கிடைக்கும்?
a. 2  b. $2\frac{1}{2}$  c. 3  d. 4

8. At what rate of compound interest per annum will a sum of Rs.10,000 becomes Rs.14641 in 4 years?
ரூ.10,000 ஐ ஒரு குறிப்பிட்ட கூட்டுவட்டி வீதத்தில் 4 ஆண்டுகளில் அதன் மொத்தத்தொகை ரூ.14641 ஆக மாறுகிறது எனில் ஆண்டு வட்டி சதவீதம் எவ்வளவு?
a. 5%  b. 10%  c. 12%  d. 15%

9. At what rate percent per annum will Rs.15,625 amount to Rs.19,683 in 3 years at Compound interest?
ரூ.15,625 தொகையானது 3 ஆண்டுகளில் ஆண்டுக்கு எத்தனை சதவீதம் என்ற கூட்டு வட்டியில் ரூ. 19,683 ஆக மாறும்?
a. 9%  b. 7%  c. 8%  d. 10%

10. What is the principal amount which earns Rs.132 as compound interest for second year with 10% interest per annum?
ஒரு அசல் 10% கூட்டு வட்டியில் இரண்டாவது வருட வட்டியாக ரூ.132ஐ கொடுத்தால் அந்த அசல் யாது?
a. Rs.1,200  b. Rs.1,000  c. Rs.12,000  d. Rs.1,320

11. The interest on a certain principal amount at 10% per annum compounded half yearly for 6 months is Rs. 2,100. Find the amount invested.
ஆண்டிற்கு 10% வீதம் அரையாண்டில் கூட்டு வட்டி கணக்கீடல் மூலம் குறிப்பிட்டத் தொகைக்கு 6 மாதங்களுக்குப் பெறப்பட்ட வட்டித் தொகை ரூ. 2,100 எனில், முதலீடு செய்யப்பட்டத் தொகையைக் காண்க.
a. Rs.42000  b. Rs.21000  c. Rs.63000  d. Rs.45000

12. A sum of money placed at C.I. doubles itself in 5 years. It will amount to eight times itself at the same rate of interest in ______ years
ஒரு தொகையை கூட்டு வட்டியில் முதலீடு செய்தால் 5 ஆண்டுகளில் இரு மடங்காகிறது. அது எத்தனை ஆண்டுகளில், அதே வட்டி வீதத்தில் எட்டு மடங்காகும்?
a. 5 b. 10 c. 15 d. 20

13. A sum of money placed at compound interest doubles itself in 6 years. It will amount to 32 times itself at the same rate of interest in.
கூட்டு வட்டி அடிப்படையில் வைக்கப்பட்ட தொகை ஆறு ஆண்டுகளில் இரண்டு மடங்காகிறது. அதே வட்டி வீதத்தில் அந்தத் தொகை 32 மடங்கு ஆவதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகும்?
a. 12 years b. 40 years c. 30 years d. 45 years

14. A sum of Rs.15,000 deposited at compound interest becomes double after 4 years. After 12 years, it will become.
ரூ.15,000 கூட்டுவட்டியில் 4 ஆண்டுகளுக்கு பிறகு இரண்டு மடங்கு தொகையாகிறது. அதே தொகையானது 12 ஆண்டுகளுக்கு பிறகு எவ்வளவு தொகையாக மாறும்?
a. Rs.250000 b. Rs. 120000 c. Rs. 140000 d. Rs. 125000

15. What is the difference between the compound interests on Rs. 10,000 for $1\frac{1}{2}$ years at 4% per annum compounded yearly and half-yearly?
ரூ.10,000 ஐ 4% கூட்டுவட்டியில் 1½ ஆண்டுகளுக்கு ஆண்டு வட்டி வீதத்திலும் மற்றும் அரையாண்டு வட்டி வீதத்திலும் கடன் கொடுக்கப்பட்டால் இவ்விரண்டு வட்டிகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு?
a. Rs. 2.04 b. Rs. 3.06 c. Rs. 4.80 d. Rs. 4.08

16. If the simple interest on a sum of money at 6% per annum for 2 years is Rs.300, find out the compound interest on the same sum for the same period at the same rate?
ஒரு குறிப்பிட்ட தொகைக்கு ஆண்டுக்கு 6 சதவீதம் என்ற அடிப்படையில், 2 ஆண்டுகளில் ரூ.300 தனி வட்டி கிடைக்கிறது என்றால், அதே தொகைக்கு, அதே வட்டி வீதத்தில், அதே கால அளவுக்கு கூட்டு வட்டி எவ்வளவு கிடைக்கும்.
a. 300 b. 310 c. 305 d. 309

17. If simple interest on a certain sum of money at 4% per annum for 2 years be Rs.52, what would be the interest if it were compounded annually at the same rate and for the same period?
ஒரு குறிப்பிட்ட தொகைக்கு ஆண்டுக்கு 4 சதவீதம் என்ற அடிப்படையில், 2 ஆண்டுகளில் ரூ.52 தனி வட்டி கிடைக்கிறது என்றால், அந்தத் தொகைக்கு அதே வட்டி வீதத்தில், அதே கால அளவுக்கு, ஆண்டுக்கு ஒருமுறை கூட்டப்படுவதாயின் கிடைக்கும் வட்டி எவ்வளவு?
a. Rs.58.20 b. Rs.54.10 c. Rs.53.04 d. Rs.60.04

18. If the compound interest on a sum for 2 years at 10% per annum is Rs.105, the simple interest on the same sum at the same rate for the same period of time is .
ஒரு குறிப்பிட்ட தொகைக்கு 2 ஆண்டு காலத்தில், ஆண்டுக்கு 10 சதவீதம் என்ற வட்டி வீதத்தில் ரூ.105 கூட்டு வட்டி கிடைக்கிறது என்றால், அதே தொகைக்கு அதே வட்டி வீதத்தில் அதே கால அளவுக்குக் கிடைக்கும் தனி வட்டி எவ்வளவு?
a. Rs.100 b. Rs.200 c. Rs.150 d. Rs.400

19. If the difference between the compound interest and simple interest on a certain sum for 2 years at 6% per annum be Rs.9, What is the sum?
இரண்டு ஆண்டுகளுக்கு 6% வட்டி விகிதத்தில் தனிவட்டி, கூட்டு வட்டி இவைகளின் வித்தியாசம் ரூ.9 எனில், அசல் எவ்வளவு?
a. 2000 b. 1500 c. 2500 d. 3500

20. The difference between the simple interest and compound interest for 2 years at 4% per annum is Rs.25. The principal amount is
இரண்டு ஆண்டுகளுக்கு 4% வட்டி விகிதத்தில் தனிவட்டி, கூட்டு வட்டி இவைகளின் வித்தியாசம் ரூ.25 எனில், அசல் எவ்வளவு?
a. Rs.15,000 b. Rs.15,500 c. Rs.16,625 d. Rs.15,625

21. The different between Simple Interest and Compound Interest on certain sum of money for 3 years at 10% per annum is Rs. 31. The sum is.
3 ஆண்டுகளுக்கு 10% வட்டி விகிதத்தில் தனிவட்டி, கூட்டு வட்டி இவைகளின் வித்தியாசம் ரூ 31 எனில், அசல் எவ்வளவு?
a. Rs. 1,000 b. Rs. 2,500 c. Rs. 10,625 d. Rs. 3,625

22. What will be the difference between simple and compound interest at 10% per annum on a sum of Rs. 1,000 after after 4 years?

ரூ 1,000 அசலானது வருடத்திற்கு 10% வட்டி வீதத்தில் 4 வருடத்திற்குபிறகு கிடைக்கும் தனிவட்டிக்கும், கூட்டு வட்டிக்கும் உள்ள வேறுபாடு யாது?

a. Rs. 32.10 b. Rs. 64.10 c. Rs. 65.20 d. Rs. 66.4

23. A sum of money invested in compound interest amounts to Rs. 800 in 3 years and to Rs. 840 in 4 years. the rate of interest per annum is

ஒரு தொகை கூட்டு வட்டியில் 3 வருடத்தில் ரூ 800 ஆகவும் 4 வருடத்தில் ரூ 840 ஆகவும் உயர்கிறது எனில், ஒரு வருடத்திய வட்டி வீதம்

a. 2% b. 4% c. 5% d. 6%

24. A sum of money becomes Rs. 45,000 after 2 years and Rs. 64,800 after 4 years on compound interest. The sum is

ஒரு குறிப்பிட்ட தொகை கூட்டு வட்டி அடிப்படையில், இரண்டு ஆண்டுகளில் ரூ 45,000 ஆகவும், 4 ஆண்டுகளில் ரூ 64,800 ஆகவும் ஆகிறது எனில், அந்த தொகையைக் காண்க.

a. Rs. 31250 b. Rs. 32520 c. Rs. 34250 d. Rs. 35000

25. Find the compound interst on Rs. 8,000 at 15% per annum for 2 years 4 months compounded annually.

ரூ 8,000-க்கு ஆண்டிற்கு 15% வட்டி விகிதத்தில் 2 ஆண்டு மற்றும் 4 மாதத்திற்கான கூட்டு வட்டியை கணக்கிடுக.

a. 3110 b. 3109 c. 3106 d. 3108

# COMPOUND INTEREST ASSIGNMENT
## Answer Key

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **A** | **B** | **C** | **A** | **C** | **A** | **A** | **B** | **C** | **A** |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **A** | **C** | **C** | **B** | **A** | **D** | **C** | **A** | **C** | **D** |
| 21 | 22 | 23 | 24 | 25 | | | | | |
| **A** | **B** | **C** | **A** | **B** | | | | | |